547

போதனை விஷய பூங்கொத்து

மொருமுறை மலரும்

547
27 SEP 1943
MADRAS

Editor ... Lourduswami, B.A., L.T.
Publi...
R... ...ining School, Trichinopoly.

JL
ഞ211, M11PD
M43.34'3
189980.

... செப்டெம்பர் 1943 ... மலர் 3

R. ... ...முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணு 1½.

போதனா விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

பக்கம்

1. பத்திராதிபர் குறிப்புகள் 41
2. யாப்பியல் 43
3. மொழிப்பயிற்சி 44
4. தாயும் சேயும் 45
5. விடுகவி விடைகள் 46
6. பாடக் குறிப்பு 47
7. யோசனைக் கணக்கு 48
8. சிறு கதை 49
9. யோசனைக்கணக்கு விடைகள் 50
10. கொலைசெய்யுந் தாவரங்கள் 51
11. தேனீ வளர்த்தல் 53
12. பூகோள உபகரணங்கள் 54
13. சில உண்மைப் பழமொழிகள் 56
14. விடுகவிகள் 56
15. நம் பாடசாலை நிகழ்ச்சிகள் 57
16. பெற்றோர் சங்கங்கள் 58
17. சங்கீதம் 59

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

OFFICE OF THE ... OF B...
27 SEP 1943
MADRAS

போதனு விஷயப் பூங்கொத்து

கொத்து 34] 15 செப்டெம்பர் 1943 [மலர் 3

பத்திராதிபர் குறிப்புகள்

189980

T. S. L. C. பரீட்சை 1944. 1944-ம் ஷு மார்ச்சு மாதத்தில் நடைபெறும் T. S. L. C. பரீட்சை எழுதவேண்டிய தவறிப் போன நம் பழய மாணவர்கள் அடுத்த-மீ 14-ம் தேதிக்குள் (14-10-'43-க்குள்) பரீட்சைப் பணத்தை இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பிவிடவேண்டும். அதோடு எந்த "ஸெண்டரில்" (Centre) பரீட்சை எழுத விருப்பம் என்பதையும் குறிப்பாய்த் தெரிவித்துவிடவேண்டும். பரீட்சைக் கட்டண விவரம் பின்வருமாறு :—

ஸெக்கண்டரி கிரேடு: ஒரு பாடம் (Single subject) அல்லது ஒரு "குரூப்" (Single group) மாத்திரம் தவறிப் போயிருந்தால் பரீட்சை எழுத ரூ. 5—0—0.

ஒரு பாடத்திற்கு மேற்பட்ட பாடங்கள் எழுத அல்லது ஒரு "குரூப்புக்கு" மேற்பட்ட பாடங்களில் தவறியிருந்தால் பரீட்சை எழுத ரூ. 10—0—0.

எலிமெண்டரி கிரேடு: ஒரு பாடம் அல்லது ஒரு "குரூப்" மாத்திரம் தவறியிருந்தால் எழுத ரூ. 3—0—0.

ஒரு பாடத்திற்கு மேற்பட்ட பாடங்கள், எழுத அல்லது ஒரு "குரூப்புக்கு" மேற்பட்ட பாடங்களில் தவறியிருந்தால் எழுத ரூ. 6—0—0.

[குறிப்பு] 1. ஷை T. S. L. C. பரீட்சை புதுத்திட்டத்தின் (Revised Scheme) படிதான் நடைபெறும். பழய திட்டம் (Old Scheme) சென்ற 1943-மார்ச்சுமாத T. S. L. C. பரீட்சையோடு முடிந்துபோயிற்று என்பதை மறக்கவேண்டாம்.

2. ஆனால் லோவர் கிரேடிலிருந்து ஹையர் கிரேடுக்கு செர்டிபிக்கேட்டை மாற்றுகிறவர்களுக்கு 1944-ம் வருஷந்தான் கடைசி பரீக்ஷை. இவர்கள் தங்கள் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர்மூலம் மனு செய்துகொள்ளவேண்டியது.

[stamp]

நம் பாடசாலைக் கல்விக் கண்காட்சி!

நம் பாடசாலைத்தினக் கொண்டாட்டம்!

அழைப்பு!!!

ஷை கண்காட்சி அடுத்த-மீ **18**-ம் தேதி திங்கள்கிழமையன்று (18-10-'43) திறக்கப்படும். **பாடசாலைத்தினக் கொண்டாட்டம்** அதற்கு அடுத்தநாள் செவ்வாய்க்கிழமையன்று (19-10-'43) நடைபெறும். ஷை வைபவங்களுக்கு வந்து, அவற்றைச் சிறப்பிக்குமாறு நாம் நம் பழய மாணவர்களனைவரையும் இதன்மூலமாய் வரவேற்கிறோம்.

ஷை கண்காட்சிக்காகவும், பந்தய விளையாட்டுகளுக்காகவும், பரிசுகள் வழங்குவதாக நம் பழய மாணவர்கள் சிலர் வாக்களித்துள்ளனர். அவர்கள் அவசியமாய் ஷை வைபவங்களுக்கு ஆஜராகி சிறப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அதுபற்றி இதன்மூலம் விசேஷவிதமாய் அவர்கட்கு எமது **அழைப்பைத்** தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மேலும் மேற்கூறிய பரிசுகளைப்பெற, நம் "பூங்கொத்தின்" சந்தாதாரர்களாய் உள்ள பழய மாணவர்களே உரிமையுள்ளவர்களாவர். ஷை கண்காட்சியிலும், பந்தயங்களிலும் நம் பழய மாணவர்கள் பங்கெடுத்துக்கொள்வது போற்றத்தக்க காரியமாகும் என்பதில் சந்தேகமில்லை. அதோடு "பூங்கொத்து" சந்தாதாரர்களாகவும் அவர்கள் விளங்கவேண்டுமென்பதுதான் எம் கருத்து.

காகிதப்பஞ்சம் மற்றும் பொருள் பஞ்சம் முதலியன மிகுந்துள்ள இக்காலத்திலுங்கூட நம் மாணவர்கள் ஷை கண்காட்சியின்பொருட்டு வெகு ஊக்கத்துடன் வேலை செய்துவருவதைக் கண்டு மகிழ்வுறுகிறோம். நம் பழய மாணவர்களும் அவ்வாறே உழைப்பர் என நம்புகிறோம். சென்ற கண்காட்சியைப்போல் இவ்வருடத்திலும் ஷை கண்காட்சி அனைவருக்கும் மிகவும் ப்ரயோஜனமுள்ளதாக இருக்குமென மதிப்பிடுகிறோம். எனவே, நம் புது மாணவர்களும், பழய மாணவர்களும் ஷை கண்காட்சி **முழுவெற்றி** பெறுமாறு உழைப்பார்களாக.

யாப்பியல்

(M. A. S. Udayar, Tamil Pandit)

பல்வகைய தாதுக்களால் உயிரினுக்கு நிலைக்களனாய் உடலை இறைவன் அமைப்பதுபோலப் பல்வகைய உறுப்புக்களால் விஷயத்திற்கு நிலைக்களனாகக் கற்றுவல்ல சான்றோர்களால் அழகுபெற அமைக்கப்பெறுவனவே செய்யுட்களாம்.

அச்செய்யுட்கள் வெண்பா முதலிய பல்வகையினவாம். அவற்றிற்கு, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என **ஆறு** உறுப்புக்கள் உண்டு.

1. எழுத்தாவது :—எழுத்திலக்கணத்திலே கூறப்பட்ட உயிர், 12; மெய், 18 ஆகிய முப்பது முதல் எழுத்துக்களும்; உயிர்மெய் 216, முற்றாய்தம் 8, உயிரளபெடை 21, ஒற்றளபெடை 42, குற்றியலிகரம் 37, குற்றியலுகரம் 36, ஐகாரக்குறுக்கம் 3, ஔகாரக்குறுக்கம் 1, மகரக்குறுக்கம் 3, ஆய்தக்குறுக்கம் 2, ஆகிய 369 சார்பெழுத்துக்களுமாம். இவை எழுத்திலக்கணத்தில் விரிவாகக் கூறப்பட்டிருத்தலின் ஆண்டு நோக்கியறிக.

2. **அசை** :—அசையாவது மேற்கூறப்பட்ட எழுத்துக்கள் தனித்தாவது இரண்டு முதலாகத் தொடர்ந்தாவது வருவதாகும்; அது நேரசை நிரையசையென இருவகைப்படும். அ. நேரசையாவது :—ஒரு குறிலேனும், ஒரு நெடிலேனும் தனித்தாவது மெய்யோடு சேர்ந்தாவது அசையாய் வருவதாகும். (உ-ம்.) கோழி, வேந்தன் இதனுள், கோ ஒரு நெடில் தனித்துவந்த நேரசை. ழி ஒரு குறில் தனித்துவந்த நேரசை. **வேந்** நெடில் ஒற்றடுத்துவந்த நேரசை. தன், குறில் ஒற்றடுத்துவந்த நேரசை. ஆ. நிரையசையாவது :—இரு குறிலேனும், ஒரு குறிலும் ஒரு நெடிலுமேனும் இணைந்துநின்று தனித்தேனும் மெய்யோடு சேர்ந்தேனும் அசையாதலாம். (உ-ம்.) வெறி, சுறா, நிறம், வரால் இவற்றுள், **வெறி**, இருகுறிலிணைந்து தனித்து நிரையசையாயிற்று. **சுறா** ஒரு குறிலும் ஒரு நெடிலும் இணைந்து தனித்து நிரையசையாயிற்று. **நிறம்**, இருகுறில் ஒற்றடுத்து நிரையசையாயிற்று. **வரால்** குறினெடில் இணைந்து ஒற்றடுத்து நிரையசையாயிற்று.

தறிப்பு :—அசைகொள்ளுமிடத்து நெடில் முன்னிற்குமாயின் அது தன்னையடுத்து மெய்வந்தால் அன்றிப் பிற எழுத்துக்களை அசையின்பொருட்டுச் சேர்த்துக்கொள்ளாது. குறில் முன்னிற்குமாயின் அது தன்னையடுத்துவரும் மெய்யையோ, ஒரு குறிலையோ, ஒரு நெடிலையோ, அக்குறில் நெடில்களை அடுத்துவரும் மெய்யையோ அசையின்பொருட்டுச் சேர்த்துக்கொள்ளும். ஆய்தம் மெய்போற் கொள்ளப்படும்.

மொழிப்பயிற்சி

(T. S. Xavier F'dez)

பல்பொருள் குறித்த ஒரே சொல் புகுக்கப்பட்டுள்ளது. செய்யுளின் பொருள் சிதையாவண்ணம் உரைகாண்க.

"சீதையை இராவணன் சிறைசெய்தல்"

1. வண்டொலி வாரிசூழல் வண்டுடை வண்டன்காண்
வண்டணி வண்டிலாத வனிதையை இராவணன்முன்
வண்டொடு வண்டிரையும் கண்டகம், புக்கபின்னர்
வண்சிறை கொண்டான் கையில், குண்டமதேந்தியேற்று

சிறைமீட்டல்

2. வேலையுள் தண்டகத்து விடுதியில் வேலைமானும்
வேலையில் ஜனகிவேள்வன் வீற்றிராத் தன்மைகண்டே
வேலையின் திரைகடாண்டி, வேலையால் பொருதிவென்று
வேலையோர் கண்ணிணுளை விடுத்தனன் வேலை என்னே!

இ-ள். 1. சங்கொலிக்கும் சாகரஞ்சூழலி (இலங்கை)ன், குற்றமுடைய பாவியாகிய (இராவணன்) வளையலையணிந்த, குற்றமில்லாத சீதாதேவியை, இராமன் வண்டு ரீங்காரம் செய்யுங் காடு புகுந்தபின், கையில் குடுக்கையேந்தி பிச்சையேற்று, சிறைகொண்டனன்.

2. வேலை மரங்களையுடைய தண்டகாரண்ய வனத்தில், மூங்கிலையொத்த வேலையாதுமின்றி (ஓய்ந்து) யிருந்த சீதையின் கணவன் (இராமர்) அவள் அங்கு இல்லாததைக்கண்டு, கடலின் திரைகளைத் தாண்டி, இராவணனோடு வேலாயுதத்தால் போர்செய்து, வேலையொத்தகண்ணையுடைய சீதையை சிறைமீட்டான் செயலை என்னவென்று செப்புவது!

(ராமுவும் கோபுவும் சண்டையிட்டுக்கொண்டு ஆசிரியரிடம் வருதல்.)

ஆசிரியர் :—ஏ, ராமு, கையை நீட்டுகிற வழக்கத்தை இனிமேல் விட்டுவிடு.

(மறுபடி சண்டையிட்டு வருதல்.)

ஆ. :—ஏண்டா கோபுவை அடித்தாய்? கையை நீட்டு.

ராமு :—கையை நீட்டுகிற வழக்கத்தை விட்டுவிடச் சொன்னீர்களே—ஸார்.

R. Govindan.

தாயும் சேயும்

(கொத்து 34, மலர் 2,— பக்கம் 25-ன் தொடர்ச்சி)

(வித்துவான், பே. திருஞானசம்பந்தர்)

மற்று இத்துணை அரும்பெரும் பண்புகள் வாய்க்கப்பெற்ற தாய் தன் பிள்ளைகளையும் நல்லறிவு, நல்லியல்பு முதலிய நற்குண நற் செய்கை மிளிர பழக்குதல்வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. பிள்ளைமைப் பருவமே வெள்ளையுள்ளம் பெற்றதாகும். மாசு இல்லாத வெள்ளையுள்ளத்திலேயே தேசு உண்டாகும். அத் தேசுவே முதுமையிலும் வீசும்.

உலகப் புகழ்பெற்றவராகக் கருதப்படும் அனைவரும் தத்தம் தாய்மாரினுலேயே முன்னுக்கு வந்திருக்கின்றனர் என்பதை பழைய வரலாறுகளே உணர்த்துகின்றன. சிவாஜி குழந்தையாயிருக்கும் போதே அவர் தாயாரான ஜீஜாபாய் அவருக்கு இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களிலிருந்து வீரர்களது வரலாறுகளை எடுத்துச் சொல்லுவாள் என்றும், அவரும் அவற்றைப் பிரியமாய்க் கேட்டு வந்ததனுல் அவர்களைப்போலவே தானும் ஆகவேண்டுமென்ற ஆவல் தூண்ட சிறுவயதுமுதலே அவர் தீரமும், வீரமும் பெற்ருர் என்று கூறும் சிவாஜி வரலாறு அறியாதவர் யார்!

ஏழ்மைக் குடும்பத்திற்பிறந்து தாயினுல் சிறந்த போர் மறவர் களின் வரலாறு சொல்லக்கேட்டு ஒரு சிறு படை மறவனுயும், பின் பெரும்படைக்குத் தலைவனுயும் அமர்ந்து வேற்றரசை வெருட்டி அயல்நாடுகளைப் பிடித்து ஐரோப்பாக்கண்டத்தையே அடிபணியச் செய்த வீர நெப்போலியனைப்பற்றி அறியாதவர் எவர்!

கருவுற்றிருந்த தன் தங்கையாகிய சுபத்திரைக்கு அண்ணனுகிய கண்ணன் பல போர்ச்சரிதங்களைச் சொல்லிவர அதனைக்கேட்டு, அப்படியே நினைவில் வைத்துவந்ததனுல் அவள் வயிற்றகத்துள்ள கருவிற்பதிந்து பின் அபிமன்யு என்ற பெயரோடு பிறந்த அவன் மூளையிற் பதிந்து இந்த வில்லியொக்கும் வில்லி எங்குமில்லை இல்லையே என்னும்படி விற்போர் செய்து துரியன் சேனையைச் சின்னபின்னப் படுத்தியதாகக் கூறும் வீர அபிமன்யு வரலாறு எதனை உணர்த்துகிறது. "இவர்களெல்லாம் தாயினுலேயே வீரமும், தீரமும், பேரும், புகழும் உடையவர்களானுர்கள்" என்பதையன்ருே விளக்குகின்றன.

"தாயைத் தண்ணீர்த்துறையிற் பார்த்தால் பிள்ளையை வீட் டிலேபோய் பார்க்கவேண்டாம், தாயைப்போற் பிள்ளை நூலைப்போற் சீலை" என்னும் பழமொழிகளும் தாயின் பழக்கவழக்கங்களே தன்னுல் பெற்று வளர்க்கப்பட்ட பிள்ளைகளிடத்தும் அமையப் பெற்றிருக்கும் என்பதனை வலியுறுத்தும்.

தாயானவள் கருவுற்றிருக்கும்போது அன்னவள்கொண்ட எண்ணங்களும், பழம் புதிய நினைவுகளுமே பின் அவள் வயிற்றிற்றோன்றும் பிள்ளையின் மூளையிற்புகுந்து உருவாகி வெளியாகின்றன என்று இக்கால மனநூல் ஆராய்ச்சி செய்பவர்கள் துணிந்துரைக்கின்றனர். இதற்குப் பல உண்மை வரலாறுகளும் உள.

ஒரு தாய் தான் சூல்கொண்டிருந்த மூன்றாந்திங்களில் (மாதம்) ஒரு கரடியைக்கண்டு பயந்தாள் என்றும் பின் அதே நினைவு அவளது மனதிற் பதிந்திருந்தமையின் அவள் வயிற்றிற் பிறந்த பிள்ளையும் அக்கரடிக்குரிய குணமும் செய்கையும் உடையதாய் பதினன்கு ஆண்டுகள் உயிர்வாழ்ந்ததென்றும், சூல்கொண்ட மற்றொரு மகள் கிளியினல் அச்சுறுத்தப்பட் (பயமுறுத்தப்பட்டு) டதனலும் அந்நினைவே அவளிடம் குடிகொண்டிருந்ததினலும், அவள் பெற்ற பிள்ளையும் கிளிப்பிள்ளையின் குரலும் செயலும் உடையதாயிற்று என்றும் அறிஞர்கள் கூறும் உண்மை வரலாறுகள் இவைபோன்று மிகப்பலவாம்.

தாய்மாரின் சொல்லுஞ் செயலும் எவ்விதமோ அவ்விதமே அவர் பெறும் பிள்ளைகளும் இருக்குமென்றும், அவர்கள் வளர்ப்பு முறைக் கேற்பவே பிள்ளைகள் நல்லவர்களாயும், கெட்டவர்களாயும் இருப்பரென்றும், மக்களின் வாழ்வும், தாழ்வும் அவர்களின் தாயார் கையிலேயேயுளது என்றும், நாம் அறிவதால், அதற்கேற்றமுறையில் நம் தாய்மார்கள் கல்வி கற்று, நல்லியல்புகள் நற்செய்கை முதலிய நற்பண்புகள் பெற்று, யார் எக்கேடு கெட்டாலென்ன எத்தெருவே போனலென்ன என்று நினையாதவராய் தனக்கென வாழாப் பிறர்க்குரியராய் விளங்கி, அகத்தூய்மையும் புறத்தூய்மையும் அமையப் பெற்றவராய் தத்தம் பிள்ளைகளையும் மேற்கூறிய நன்முறையில் வளர்த்து நாட்டின் உயர்விற்கும், முன்னேற்றத்திற்கும் ஊக்குவாராக.

விடுகவி விடைகள்

(கொத்து 34, மலர் 2, பக்கம் 27)

விடைகள் (1) எலி. (2) வருஷம், மாதம், நாள். (3) கிளி; கொக்கு; தாம்பூலம்; உமிழ்நீர். (4) அகப்பை.

ஷ விடையளித்தவர்கள் :—M. Sandanam, Uthamaseri; S. Arpudasamy; P. Karuppannan VII Std., R. C. M. School; S. Sebastian, Michaelpatti; G. Sivaperuman, Pupil, Board School, Kidar, Villapuram.

பாடக்குறிப்பு

சரித்திர பாடம் : V வகுப்பு.

நோக்கம் : விஜயநகரராஜ்யத்தையும், கிருஷ்ணதேவராயரது ஆட்சியையும் பற்றிய அறிவு புகட்டுதல் :

பீடிகை : தெனாலிராமன்—அவனது விகடத்தேர்ச்சி இவற்றைப் பற்றிச் சிறிது ப்ரஸ்தாபித்து அவன் கிருஷ்ணதேவராயரது அரண்மனை விகடன் என்று கூறுதல்.

மதுரை—திருமலைநாயக்கர்—ராணி மங்கம்மாள் இவர்களைப் பற்றிப் பிள்ளைகளது பழைய அறிவை ஞாபகப்படுத்தி, பாண்டியநாடு அக்காலத்தில் விஜயநகர இராஜ்யத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தது என்றும் ஷை திருமலைநாய்க்கர் விஜயநகர அரசருக்குக் கீழ் இருந்தனர் என்றும் கூறி விஜயநகர இராஜ்யத்தின் பெருமையைப்பற்றிக் கற்பிப்பதாகச் சொல்லவும்.

உபகரணம் : இந்தியா எல்லைக் கோட்டு தேசப்படத்தில், தமிழ்நாடு, விஜயநகர ராஜ்யம், கிருஷ்ணாநதி—துங்கபத்திரைநதி, பாமினி ராஜ்யம் வடக்கிலுள்ள டில்லி—இவை குறிக்கப்பட்டிருத்தல்.

ஹம்பியிலுள்ள—அழிந்துபோன, கோட்டை கொத்தளங்களைக் காட்டும் படங்கள்.

கிருஷ்ணதேவராயரது உருவப்படம் முதலியன.

பாடவிளக்கம் : டில்லியில் அரசாண்ட "துக்லக்" வம்சத்தைச் சேர்ந்த முகம்மதிய அரசர், தென்னிந்தியாவில் "பாமினி" ராஜ்யத்தை ஏற்படுத்தினர்.

மகம்மதியர் ஆட்சியை வெறுத்துவந்த இந்துக்கள் அவர்களுடைய ஆட்சியை ஒழிக்கச் சமயம் பார்த்திருந்தனர். "ஹரிஹரர்" "புக்கர்", என்ற இரண்டு சகோதரர்கள் சிறந்த வீரர்கள். இவர்கள் இந்துக்களுடைய எண்ணத்தை நிறைவேற்றத் தலைப்பட்டனர்.

இவர்கள் துங்கபத்திரைநதிக்கரையில் ஒரு பலமான கோட்டையைக் கட்டி அதற்கு "வித்யாரண்ய நகர்" என்று பெயரிட்டனர். (அவர்களது குருவின் பெயரால்) பிறகு அதற்கு விஜயநகர் என்ற பெயர் வரலாயிற்று. "ஹம்பி" என்ற கோட்டை அங்குள்ளது. இவ்வாறு விஜயநகர ராஜ்யம் தோன்றிற்று. அவ்வரசர்களுக்கும், மகம்மதிய பாமினி அரசர்களுக்கும் அடிக்கடி சண்டை.

கிருஷ்ணதேவராயர் விஜயநகர ராஜ்யத்தின் அரசராக வந்ததும் அதன் பெருமை அதிகரித்தது.

மகம்மதிய அரசர்கள் அடங்கி ஒடுங்கிப் போய்விட்டனர். கிருஷ்ணதேவராயர்—சேர, சோழ, பாண்டிய நாடுகளையும் அடக்கியாண்டார்.

இவர் சிறந்த கல்விமான். சங்கீதப் பிரியர். பற்பல கலைகள் இவரது ஆதரவால் ஓங்கின. தெனாலிராமன்—இவரது சமஸ்தான விகடகவி. சிறந்த வீரராக இருந்தும், மிக்க தெய்வபக்தியுள்ளவர். விஷ்ணுபக்தர்—"ஆண்டாள்" எனும் "கோதைநாயகி" யின் சரிதம் எழுதியுள்ளவர். இவர் வடமொழியிலும் தெலுங்கு பாஷையிலும் தேர்ச்சி பெற்றவர். இவரது முயற்சியால் தெலுங்கு சிறப்படைந்தது. "வேமன்ன என்ற தெலுங்கு கவிஞர், இன்னும் பல கல்விமான்களும், "அப்பாஜி" என்ற மதியூகியான மந்திரியும் இவரது சபையை அலங்கரித்தனர். திருமலைநாயக்கனார் இவரால் நியமிக்கப்பட்ட பாண்டியராஜப் பிரதிநிதியாவர். தென்னாட்டில் தெலுங்கு பரவிய தற்குக் "கிருஷ்ணதேவர்" காரண புருஷர்—தென்னாட்டில் பல வைணவக் கோயில்களும் ஏனைய கோவில்களும் இவரால் கட்டப் பட்டன. இவர்காலத்தில் இந்துக்கள் வெகு சுகமாக வாழ்ந்தனர். ஆனால் இவருக்குப்பின் வந்தவர்கள் திறமை இல்லாதிருந்த காரணத் தால் மீண்டும் மகம்மதியர்கள் ஆதிக்கம் பெற்றனர். விஜயநகர ராஜ்யம் முடிவில் சீர்குலைந்தது. விஜயநகர ராஜ்யத்தின் பெருமை களையறிய ஷ "ஹம்பி" என்னும் இடத்தில் காணப்படும் சிதைந்த கட்டிடங்களும் சிற்ப வேலைகளும் சிறந்த சான்றாகும்.

முறை: கதைரூபமாகவும், படங்களைச் சமயோசிதமாகக் காட்டி யும், தேசப்பட விளக்கத்தைக்கொண்டும், இடையில் தக்க கேள் விகள் போட்டும் உற்சாகத்துடன் போதிக்கவேண்டும்.

அப்பியாசம்: விஜயநகர ராஜ்யம் ஆரம்பமானதற்குக் காரணம் என்ன? எங்கு இந்த ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது? "விஜயநகரம்" எனப் பெயர் வருவானேன்? கிருஷ்ணதேவரது பெருமை எதில் அடங்கியது? திருமலைநாயக்கர் பாண்டியநாட்டையாளக் காரணம் என்ன? விஜயநகர இராஜ்யத்தின் பெருமைகளை நாம் இக்காலத்தில் எவ்வாறு ஊகிக்கலாம்? இந்த ராஜ்யம் சீர்குலையக் காரணம் என்ன?

யோசனைக் கணக்கு

(T. Duraisamy Pillai, Teacher.)

ஒரு வீட்டில் 20 தோசைகள் சுடப்பட்டன; ஆண் ஒருவருக்கு மூன்று வீதமும், பெண் ஒருவருக்கு இரண்டுவீதமும் குழந்தை ஒன் றுக்கு ஒரு தோசையில் பாதியுமாகக் கொடுக்கப்பட்டன. மொத்தத் தில் இருபதுபேர்களுக்குக் கொடுக்கப்பட்டால், ஆண், பெண், குழந் தைகள் வகைக்கு எத்தனைபேர்?

சிறு கதை

குட்டு வெளியாகிறது

(G. M. Victor)

ஒரு நாள் மத்தியானம், ஆலமரத்து நிழலில் இரண்டு மிருகங்கள் சம்பாஷித்துக்கொண்டிருந்தன. அவைகளில் தந்திரமுள்ள மிருகம் மற்றொன்றைப்பார்த்து அண்ணே! நீ சொல்வதுதான் நல்ல யோசனை! நான் ஒரு வைத்தியனாகவும், நீ ஒரு வேலைக்காரனாகவும் வேஷம் போட்டுக்கொள்வோம். வைத்தியஞ்செய்யவரும் மிருகங்கள் எனக்கும், அவைகள் கொண்டுவரும் இலை, தழை, புல் பூண்டு முதலியவைகள் உனக்கும் நல்ல இரையாகும். நொண்டியாகிய எனக்கும், கிழவனாகிய உனக்கும் ஒருபோதும் உணவுப் பஞ்சமே ஏற்படாது. கவலைப்படவேண்டியதேயில்லை. இரையுள்ளவன் இறைவனுக்கு அஞ்சவேண்டியதில்லை என்று சொல்லிக்கொண்டு அந்நிழலை விட்டுப் புறப்பட்டன. இந்தச் சம்பாஷணைகளையெல்லாம், மரத்தின் மேலிருந்து ஒரு பிராணி கவனித்துக்கொண்டேயிருந்தது.

சில மிருகங்கள் இந்தப் புது வைத்தியனையும் அவன் வேலையாளையும் சந்தித்தன. அவைகள் வைத்தியனைப்பார்த்து புத்தியில் சிறந்த நண்பனே, நீ ஏன் வைத்தியனைப்போல் மருந்துப்பட்டைகளையும் வேர்களையும் சுமந்துகொண்டு வருகிறாய். மனிதர்களைப் போல மிருகங்களுக்கும் வைத்தியம் செய்யப்போகிறாயா? என்று கேட்டன. ஆம், சிநேகிதர்களே! வைத்தியத்தினால் எத்தனையோ மிருகங்கள் சாகாதபடி தடுக்கலாம். நமது வம்சம் மேன்மேலும் விருத்தியாகும் என்றது.

வைத்தியனுக்கு வேண்டிய சௌகரியமான இடங்கொடுக்கப் பட்டது. அங்கு வியாதியஸ்தர்கள் தவிர மற்றவர்கள் வரக்கூடாது. ஒருவர் குணமானபிற்பாடுதான் மற்றவர் வரலாம். ஒவ்வொருத்தரும் மருந்து செய்ய வேர், பட்டை, இலை, புல், பூண்டுகள் கொண்டுவர வேண்டும். வைத்தியர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மிருகங்களையும் கொன்று சாப்பிட்டு வந்தது. வேலையாள் புல்பூண்டுகளைச் சாப்பிடுவான். இப்படியாக வெகுகாலம் நடந்துவந்தது.

ஒருநாள் ஒரு குடுகுடுப்பைக்காரன் சிங்கராஜன் முன்தோன்றி, குடுகுடு குடுகுடு, நல்லகாலம் வருகுது நல்லகாலம் வருகுது! க்ஷேமம் பெருகுது, வஞ்சகனும் துஷ்டனும் வந்த வழிபோவான், குடுகுடு, குடுகுடு மாறுவேஷம்பூண்டு மக்கள் உயிரைப் பறிக்கிறார்கள்; குடுகுடு குடு என முழக்கினான். அப்போது ராஜன் அப்படி ஒருவருமில்லையே. நானிருக்கும்பொழுது எவன் அப்படிச் செய்வான்? என்று கோபத்துடன் கேட்டது. அரசே ஒரு வைத்தியரிருக்கிறார். அவரால்தான்

உமது ஜனங்களெல்லாம் சாகிறார்கள். இப்போதே என்னோடு வாருங்கள் அவன் குட்டை வெளியாக்குகிறேன்.

வைத்தியர் ஒரு மானுக்கு ஆபரேஷன் செய்துகொண்டிருந்தது. வேலைக்காரன் புல் கட்டை காலிசெய்துகொண்டிருந்தது. எதிர்பாராதவிதமாய் சிங்கமும், குடுகுடுப்பைக்காரனும், மற்ற மிருகங்களும் தன் வைத்தியசாலைக்குள் நுழைவதைக்கண்டு பயந்தார் வைத்தியர். ஆனாலும் தைரியத்தைக் கைவிடவில்லை. ஏராளமான எலும்புக் குவியல்களையும், இறந்த மிருகங்களின் மாமிசங்களையும், அப்பொழுது தான் கொல்லப்பட்டுக்கிடந்த மானையுங் கண்ட சிங்கம் தன் சுயரூபத்தில் தோன்றினது. அடே! துஷ்டா என்னிடமா உன் தந்திரத்தைக் காட்டத்துணிந்தாய்? வஞ்சக நெஞ்சுள்ள நரியே இதோ உன் பலனை அனுபவி என்று ஒரே அடியாய் தன்பாதத்தால் அறைந்து கொன்றது. வேலைக்காரன் காதுவெடிக்கக் கத்தினான் பயத்தினால். நரியைச் சிநேகிதனாகக்கொண்ட முட்டாள் கழுதையே உனக்கும் அதே கதிதான் என்று அதன் உயிரை எமலோகத்துக்கு அனுப்பி விட்டது.

சிங்கம், தன் நாட்டைக் காக்கவந்த குடுகுடுப்பைக்காரரின் சாமார்த்தியத்தை மெச்சினது. தனது சொந்த ஜோசியக்காரனாக அமைத்துக்கொண்டது. அதுகேட்ட ஏராளமான நாவல்மரங்கள் நிறைந்த தோப்பை அதற்கு இனமாகக் கொடுத்தது. குடுகுடுப்பைக் காரக் குரங்கு தனது குழந்தை குட்டிகளுடன் நாவல்பழங்களைத் தின்றுகொண்டு சுகமே வாழ்ந்து வருகிறது.

யோசனைக்கணக்கு விடைகள்

(கொத்து 34, மலர் 2, பக்கம் 27.)

விடை : ஒரு வாழைப்பழத்தின் விலை **3** பை. தேங்காயின் விலை **1** அணா.

ஷ விடையளித்தவர்கள் :—T. Duraiswamy Pillai, Teacher, Amirtharayankottai; P. Henry Devasahayam; S. Arpudasamy, Teacher, V. N. P. School, Puthur; Arulsusai Gnanu, Kombady; M. G. Mariamichael; R. Ignatius Jeganathan; S. Sebastian, Michaelpatti; Karuppannan VII Std. R. C. M. School; A. S. Dharmanathan, VI Std., R. C. M. School; S. R. Angannan, Teacher, Sulur; M. Sandanam, Uthamaseri; Thirunavukkarasu, Pupil, Board School, Kidar, Villapuram.

கொலைசெய்யுந் தாவரங்கள்

(M. V. Rajandram)

189980.

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக; மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்பது ஆன்றோர் வாக்கு. ஆகவே மக்கள், மாக்களையும் ஏனைய பொருட்களையுந் தாராளமாக எவ்வளவுக்கு அவை கடவுள் விருப்பத்துக்கு விரோதமாக உபயோகப்படுத்தாமல் இருக்குமோ அவ்வளவுக்கு அனுபவிக்கலாம். மண், மரம், மாக்கள், மக்கள் இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன. மண்ணினின்று மரஞ்செடி கொடிகள் உண்டாகின்றன. அவை ஆகாயத்தினின்றும் தரையினின்றும் உணவுப்பொருள்களைச் சம்பாதித்துக்கொள்கின்றன. அவற்றை உண்டு வளரும் சின்னஞ்சிறிய பூச்சிகளும் வண்டுகளும், பூச்சிகளையுந் தாவர தானியங்களையும் அருந்தி வாழ்வன பறவைகள். பறவைகளைத் தின்று வாழும் பறவைகளும் உண்டு, சில மிருகங்களும் உண்டு. சாகபக்ஷிணிகளாகவுள்ள மிருகங்கள், தாவர உணவால் வாழும். தாவரங்களைத் தீண்டா நாற்காற் பிராணிகள் வேறு மிருகங்களைக் கொன்று தின்று உயிர்வாழும். மனிதனோ இவற்றிற்கெல்லாம் மேற்பட்டவன் ஆகையால் யாவற்றையும் ஆண்டு வேண்டுவனவற்றை உணவாகக்கொண்டும் வேண்டாதவைகளைத் தள்ளிவைத்தும் வயிற்றை வளர்க்கிறான். புலி, சிங்கம், சிறுத்தைபோன்ற சில வனவாசிகளே மனிதனையும் உண்ண ஆசைவைக்கின்றன. ஆனால் எப்போதும் அவை அப்படிச் செய்வதில்லை. ஆறறிவுபெற்றும் அறிவுமாறி அலையும் ஆன்மாக்கள் சிலவே தம்போன்ற பிற சரீரங்களில் இச்சை வைத்து உண்ணத்துணியும். அவற்றை நாம் பூதக்கணங்களோடு சேர்த்துவிடுவோம்.

இவையெல்லாம் நமக்கு விநோதமாகத் தோன்றுவதில்லை. ஆனால் செடி கொடிகளிற் சில உயிருடன் துள்ளிக்குதித்து ஓடி ஆடும் ஐயறிவுபெற்ற பிராணிகளைக்கூடப் பிடித்து உண்கின்றன என்று நான் சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? அது சொல்லும் ஆளைப் பொறுத்தது, கேட்கும் மனிதரையும் பொறுத்தது. இத்தகைய தாவரங்கள் (நன்றாகக் கண்டுபிடிக்கப்பட்டவை) 500 வகைகள் இன்று இருக்கின்றன என்றால் நீங்கள் நான் சரடுவிடுவதாக நினைத்துவிடுவீர்கள். இதையே இப்படி எண்ணிவிட்டால் இன்னும் தாவர சாஸ்திரம் தெளிவாகக் காட்டும் எண்ணிறந்த அதிசயங்களை என்னவென்று சொல்வீர்கள்.

மேற்கூறிய கொலைத்தொழிலில் ஈடுபட்ட தாவரங்களுக்குப் பிடிபட்ட சில பிராணிகளே முக்கிய ஆகாரமன்று. தாவரங்களுக்கு உப்புவாயுகலந்த ஆகாரம் (Nitrogenous food) வேண்டும். கரிப்

பொருளும் அவசியமான உணவே. கரிப்பொருளை இத்தாவரங்கள் தங்கள் இலைகளில் உள்ள இலைப்பச்சையில் கரியமலவாயுவிலிருந்து பிரித்து, சூரிய ஒளியின் உதவியால் உணவு தயார்செய்துகொள்கின்றன. உப்புவாயுப்பொருள்கள் பூமியில் உள்ள உப்புக்களில் காணப்படும். பிராணிகளின் உடலிலும் உப்புவாயு கலந்த பொருள் அதிகமாக உண்டு. (நாய்களை அடித்து, மா, எலுமிச்சை முதலிய மரங்களுக்கு உரம் வைப்பார்கள்.) மேற்சொன்ன தாவரங்களோ உப்புவாயுச்சத்து குறைந்த பூமியில்தான் அதிகமாகக் காணப்படும். ஆகவே குறைவை நிவர்த்திக்க உயிருடன் திரியும் பூச்சிகளையும் சிறு நாற்காற் பிராணிகளையும் உயிருடன் பிடித்து, வதைத்து, கொன்று தின்னும். இவ்வாறு பிடிக்கும் வகைகளும், வதைக்கும் வகைகளும், அருந்தும் வகைகளும் ஒவ்வோர்வகைச் செடியிலும் வேறுபடும்.

தாவர சாஸ்திரத்தில் தாவரங்களைத் தனித்தனிக் குடும்பவகைகளாகப் (families) பிரிப்பார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் சிறு பிரிவுகள் (genera) உண்டு. அவற்றிலும் சிறு பிரிவுகள் (species) உண்டு. அவற்றில் தனித்தனி வகைச் செடிகள் அடங்கும். மேலே சொன்ன 500 தனிவகைச் செடிகள் நான்கு குடும்பத்துள் அடங்கும்.

இவை ஆறறிவு படைத்த மனிதன் மூளைக்கும் எட்டாதவிதமான உபாயங்களையெல்லாம் உபயோகித்துப் பிராணிகளைப் பிடிக்கின்றன. பூனை எலியைப் பதுங்கிப் பிடிப்பதுபோன்ற வகையும், மனிதன் யானைகளை முடுக்குகளில் (kheda) புகவைத்துப் பிடிப்பதுபோலவும், எலியைப் பத்தயத்துள் மாட்டுவதுபோலவும் பற்பல முறைகளையெல்லாம் இவை கையாடுவது வெகு ஆச்சரியமாயிருக்கும். அதிலும் ஆச்சரியம் அகப்பட்ட பிராணிகள் என்னவிதமாக உணவாகின்றன என்பது முற்றிலும் உரைக்கமுடியாமலிருப்பதே. இவ்வகைச் செடிகளில் பெரும்பான்மையானவை அமெரிக்காவில் காணப்படுகின்றன. சிலவகைச் செடிகளை உங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறேன். படங்களுடன் விளக்குவது எளிதாகும்; ஆயினும் என்னால் இயன்ற அளவு அவையின்றி முயற்சிக்கவேண்டியதாகிறது.

1. ட்ரோஸோபைலும் (Drosophyllum) என்பது ஓர் சிறு குத்துச்செடி. ஓரடிக்குள் இருக்கும். அமெரிக்க வகை. இலைகள் அடியிலிருந்து நீளமான காம்புகளுடன் அகலக்குறைவாகத் தோன்றும். இவற்றில் எண்ணிறந்த மயிர்கள் உண்டு. இம்மயிர்களின் நுனியில் செடியினால் உற்பத்திசெய்யப்பட்ட ஓர்வகைப் பசை சிறு பனித்துளிபோல் தோன்றும். இவற்றையே தேன் என மயங்கி உண்ணச்செல்லுஞ் சிறு பூச்சிகள் ஒட்டிக்கொள்கின்றன. மீள வழியறியா இவை மூன்று நான்கு நிமிஷங்களில் மயிர்களால் சுற்றப்பட்டிருக்கும் நிலைமை பரிதாபமானதே. இலை சுருண்டுவிடும். இருமணிக்குள் ஜீரண நீர் உற்பத்தியாகிப் பிராணியைக் கரைத்துச்

சாப்பிட்டுவிடுகிறது. இருநாளைக்குப்பிறகு இலை மறுபடியும் நிமிர்ந்து நிற்கக் காணலாம். மூன்ருை் நாளில் மயிர்கள் முன்போலவே பனிப் பசைத்துளிகளுடன் நிற்கும். சுமார் இருபது இலைகள்கொண்ட இச் செடி இரவுபகலாக இவ்வேலையில் ஈடுபடும்.

2. நெப்பந்தல் (Nepanthes), காரஸீனியா (Carecenia) என்பவைகளும் அமெரிக்க வகைகளே. இவை பெரிய செடிகள். நெப்பந்தல் படருங் கொடி.

(தொடரும்.)

தேனீ வளர்த்தல்

(S. Marimuthu, Manager, Jothi Kalvi Nilayam, Erode)

தேனீக்களில் மலைத்தேனீ, அடுக்குத்தேனீ, கொம்புத்தேனீ, கொசுத்தேனீ எனப் பலவகைகள் உண்டு. அடுக்குத்தேனீயைத்தான் நாம் பிடித்து வளர்க்க முடியும். மலைத்தேனீயை வளர்க்கமுடியாது. ஏனெனில் மலைத்தேனீக்கு விஷம் அதிகம். கோபம் அதிகம். மலைத் தேனீக்குக் கோபம் வந்துவிட்டால் நாம் எவ்வளவுதூரம் ஓடினாலும் நம்மை விடாமல் துரத்திக்கொண்டேவரும். நம்மைக் கொட்டியே தீரும். கொட்டினால் உடல் வீங்கும். மரணம் ஏற்பட்டாலும் ஏற் படும். அடுக்குத்தேனீ கொட்டினால் கொஞ்சமட்டும் வலியிருக்கும். அபாயம் ஒன்றும் நேராது. உடம்புக்கு நன்மையையே பயக்கும். அமெரிக்காவில் ஏதோ ஒருவித நோயைப் போக்குவதற்கு அடுக்குத் தேனீயைத் தானாகப் பிடித்துத் தன் உடம்பில் கொட்டும்படி செய்கி ருர்களாம். மலைத்தேனீக் கூட்டில் அடுக்குத்தேனீக் கூட்டில் இருப் பதைவிட அதிகமாகத் தேன் கிடைக்கும்.

மலைத்தேனீக்கு யாராவது தொந்தரவு கொடுத்துவிட்டால் அது நம்மைத் துரத்திக்கொண்டுவரும். அப்பொழுது சிலர் பக்கத்தி லுள்ள ஏதாவது ஒரு குளத்தில் குதித்துக் கொஞ்சநேரம் நீரில் மூழ்கி யிருந்து பிறகு வெளியே வந்தாலும் விடாமல் கொட்டிவிடுமாம். ஆகையால் இவ்வித உபாயத்தாலும் மலைத்தேனீயிடமிருந்து தப்பிக்க முடியாது. அதனிடமிருந்து தப்புவிக்கும் வழி பின்வருமாறு மலை வாசிகள் செய்கிருர்களாம்.

(தொடரும்)

பூகோள உபகரணங்கள்

(R. Pitchai Pillai)

ஒவ்வொரு பாடசாலையிலும் பூகோள பாடம் போதிப்பதற்காக தேவையான சாதனங்கள்வேண்டும். மேல்வகுப்புகளில் பூகோளம் கற்பிப்பதற்காகப் பிரத்தியேகமான அறையொன்று இருப்பது நல்லது. சில உயர்ந்த கலாசாலைகளில்மட்டும் பூகோள பாடத்திற்கான தனி அறை ஒன்றிருப்பது வழக்கம். பல பாடசாலைகளில் இம்மாதிரியான பூகோள பாட அறை இல்லாதது பெருங்குறையேயாகும். ஆரம்பப்பாடசாலைகளில் தனி அறை வேண்டியதில்லை. எனினும் அவசியமான பூகோள உபகரணங்கள் இருந்தால்மாத்திரம் பூகோள பாடம் பயனளிக்கும்.

1. தேசப்படங்கள் (Maps)

ரேகைகள், வர்ணங்கள் இவற்றுலான அடையாளங்களைக் கொண்டு நீர் நிலப் பிரிவுகளடங்கிய பூப் பிரதேசத்தின் பரப்பு, இயற்கையமைப்பு, சீதோஷ்ண நிலைமை, முதலிய விவரங்களைக் காண்பிக்கும் சித்திரச் சின்னங்களாகிய தேசப்படங்களைப் பூகோள அறிவைக்கொடுக்கும் விஷயங்களடங்கிய குறிப்புகளென்றும் (Records), தூரத்திலுள்ள இடங்களைப்பற்றியறிய ஏதுவான தூர திருஷ்டிக் கண்ணாடிகளென்றும் (Binoculars) அழைக்கலாம்.

பாடசாலைகளில் தேசப்படங்களை உபயோகிப்பதின் நோக்கம் யாதெனில், தேசப்படத்தைப் பார்த்ததும் அப்படம் குறித்துக்காட்டும் பிரதேசத்தின் இயற்கை நில அமைப்பைப்பற்றிய பொதுவான அறிவையும் (Physical Land Relief) நீர்ப்பாசனம், நிலத்தின் தன்மை, சீதோஷ்ண நிலைமை, இயற்கைத்தாவரங்கள் முதலியவைகளைப்பற்றிய அறிவையும் ஏற்படுத்துவதற்காகவே. ஆகவே இந்தியா, உலகம் இவை சம்பந்தமாகப் போதிக்குங்கால் தேசப்படங்கள் அவசியம் தேவையாகும்.

பலவகைப்பட்ட தேசப்படங்கள்:—இயற்கையமைப்பு தேசப்படங்கள் (Physical features Map):—இவற்றில் மேடான இடங்களும், சமவெளிகளும், மலைப்பிரதேசங்களும், நீர்ப்பாகங்களும் ஏற்ற வர்ணங்களைக்கொண்டு காட்டப்பட்டிருக்கும். இந்தியா, உலகத்தின் பற்பல தேசங்கள் இவற்றின் இயற்கையமைப்புகளைப்பற்றிப் போதிக்க இப்படங்கள் ஏதுவானவை.

ராஜ்ஜியப்பிரிவு தேசப்படங்கள் (Political Maps):—இவைகளின் உதவியைக்கொண்டு கண்டங்கள், தேசங்கள், மாகாணங்கள், சமஸ்தானங்கள் இவற்றின் பிரிவுகளைத் தெரிந்துகொள்ளமுடியும். பூமியின் ஏற்றத் தாழ்வுகளைக் கண்டுகொள்ளமுடியாது.

பிரத்தியேகமான தேசப்படங்கள் (Special Maps):—பூகோள விவரங்கள் யாவையும் ஒரே தேசப்படத்தில் காட்டி விளக்குவது

தவறும். மாணவருக்குக் குழப்பம் ஏற்படாதவண்ணம், அந்தந்தப் பாடத்திற்கான விவரங்களைமட்டும் காட்டக்கூடிய பிரத்தியேகமான தேசப்படங்களை உபயோகிப்பது நல்லது. (உ-ம்) பூமியின் பரப்பு, சீதோஷ்ணநிலை (குளிர், வெப்பநிலை, காற்று), இயற்கைத் தாவரங்கள், தேசத்தின் செல்வ விருத்தி (Economic Development), ராஜ்ஜியப் பிரிவுகள், ஜனத்தொகை, இவை ஒவ்வொன்றையும் தனித் தனியாய் விளக்கிக்காட்டும் தேசப்படங்கள் இருப்பது கிரமம். இவை தேசவாரியாக அல்லது கண்டவாரியாக இருக்கலாம்.

கரும்பலகையில் வரையும் தேசப்படங்கள் (Black Board Sketch Maps) :— தயாரிக்கப்பட்ட தேசப்படங்கள் இல்லாத போதும், இன்னும் தேவையான சந்தர்ப்பங்களிலும் காலதாமதமாகா தபடிக்கு தேசப்படங்களை வகுப்பிலேயே வரைந்துகொள்ள நேரிடும். (உ-ம்) இந்தியாவின் இருப்புப்பாதைகளைப்பற்றிப் போதிக்க, ஆசிரியர் பாடபோதனையின்போதே, கரும்பலகையில் தேவையான தேசப் படத்தை வரைந்து பூர்த்திசெய்வது சிறந்ததாகும். காலதாமத மேற்படாதபடிக்குக் கருப்புத்துணி அல்லது கருப்புக் காகிதத்தில் வரைந்துள்ள இந்தியா வரிவுருவத்தை (Outline Sketch of India) உபயோகித்துக்கொள்ளலாம்.

மேற்கூறிய 4 வகையான தேசப்படங்கள் நான்காம் வகுப்பு முதல், எட்டாம் வகுப்பு அல்லது III பாரம் முடிய போதிக்கவேண்டிய இந்தியா, உலக பூகோள பாடங்கள் சார்பாக இருக்கவேண்டும்.

சம உயரக் கோட்டுப் படங்கள் (Contour Maps) :—ஒரு பிரதேசத்தின் நிலப்பரப்பு அமைந்துள்ள போக்கை சம உயரக் கோடுகளைக்கொண்டு திட்ட வட்டமாகக் காட்டக்கூடியவைகளாகும். ஒரு மலையின் உயரத்தைமட்டுமேயன்றி, அதன் சரிவான பக்கங்களைப் பற்றியும் தெளிவாயறிந்துகொள்ளலாம். இவற்றில் வர்ணங்கள் தீட்டப்பட்டிரா. இப்படங்கள் மத்திய பருவத்தில் மாத்திரம் உபயோகமாகும். (6th Std. or 1st Form upwards)

2. பூகோள உருண்டைகள். (Globes)

தேசப்படங்களைமட்டும் உபயோகிப்பதால் ஏற்படக்கூடிய தவறுகளைத் திருத்திக்கொள்ளவும், பூகோள அறிவு சிறந்திருக்கவும் குளோப்புகள் அவசியம் உபயோகிக்கப்படவேண்டும். மாணவருடைய கற்பனாசக்தி நன்கு பயிற்சி பெற்றிருக்கும் நிலையில் இவற்றை உபயோகிப்பது நல்லது. அப்போதுதான் சிறுவர்கள் பூலோகத்தின் மிகப் பெரிய பரிமாணத்தையும், அதன் உருண்டையான வடிவத்தையும்பற்றி சரியாய் ஊகிக்கக்கூடும். IV, V வகுப்புகளிலிருந்து உபயோகிக்க ஆரம்பித்தல் நல்லது. பூமியின் வடிவம், சலனங்கள், பகல் இரவு, அக்ஷரேகைகள், தீர்க்கரேகைகள், பூமியின் அச்சு, துரு

வங்கள், மணிநேரம் கணக்கிடுதல், சங்கேதமணி (Standard time), ஸ்தலமணி (Local time), பருவகாலங்கள், ஏற்படுதல் உலகத்தின் சீதோஷ்ணமண்டலங்கள், கண்டங்கள் சமுத்திரங்கள் முதலியவை களைப்பற்றித் தவறின்றிப் போதிப்பதற்குக் குளோப்புகள் அவசியம் தேவையாகும். (தொடரும்.)

சில உண்மைப் பழமொழிகள்

A. Appasami.

1. ஒருவன் உன்மீது கோபித்து உர் என்று இருந்தால், நீ அதைத் தெரிந்துகொள்ளாதவனாகவே நடந்துகொள். அவன் ஏமாந்துபோவான்.

2. சிலர் எண்ணுகிறார்கள், தாங்கள்மட்டும் செட்டாக எண்ணிச் செலவிடவேண்டுமாம். மற்றவர்கள்மாத்திரம் எண்ணிக்கூடப் பாராமல் தாராளமாய்ச் செலவிடவேண்டுமாம். (இதுவும் ஒரு நியாயமா.)

3. தங்கள் உள்ளத்தில் நினைத்ததைப் பிறர் அறிந்துவிடும் போது தாங்கள் அவ்வாறு எண்ணவே இல்லை என்று சாதித்தபோதிலும், அவர்களின் கள்ள உள்ளத்து லக்ஷணத்தை முகமே நன்கு காட்டிவிடும்.

4. உனக்குப் பக்கலில் உள்ள வீட்டாருக்கு நீ தந்த கடனை உன் மனைவிக்குச் சொன்னால் நீ அதைத் திரும்ப அவர்களிடமிருந்து அடையுமுன்பே உன் மனைவி பெற்றுச் செலவிட்டுவிடுவார். வெகு நாள் பொருத்தே அவர் (மனைவி) வாங்கிக்கொண்ட அந்த விஷயத்தை நீ அறிய நேரும். (தொடரும்.)

விடுகவிகள்

(இது என்ன?)

1. காடெல்லாம் சுற்றிவரும்; கண்ட தண்ணீர் குடியாது.

A. I. Dharmanathan.

2. பத்துபேரைக்குத்தி, பதினொருபேரைத் தீட்டி, குதிரை சவாரி செய்து, இந்த ராஜா பட்டம்போய், அடுத்தராஜா பட்டம் வருகிறார்.

R. Shanmughamurthi.

3. கடித்தால் கடிபடாது; பிடித்தால் பிடிபடாது.

4. அப்படித் திருப்பினால் அழுதிடுவான்; இப்படித் திருப்பினால் அமர்ந்திடுவான்.

Arul Susai Gnanam.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

ஆகஸ்டு 12, 13, 14-ம் தேதிகளில், நம் போர்டிங் ஆசிரிய மாணவர்களுக்கும், வெளி ஆசிரிய மாணவர்களுக்கும் வழக்கம்போல் வருஷ தியானம் நடைபெற்றது. சென்னை, வெப்பேரி பங்கு சுவாமியார் சங். ராஜு சுவாமியவர்கள் தியானங்கொடுத்தருளினர். தியானம் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்தது. மாணவர்களின் பயத்தைப் போக்கி, உற்சாகத்தையூட்டி, சலிப்பை நீக்கியது. இத்தியானம் 15—8—'43-ல் தேவதாய் பரலோகத்துக்கு ஆரோஹணமான திருநாளோடு முடிவுற்றது. அன்று காலையில், பழைய புதிய மாணவர்கள் தியானங்கொடுத்த சுவாமியவர்களுக்கு நன்றிசெலுத்தினர்.

தேசீய முன்னணி (National War Front)

5—8—'43-ல் கொளப்பலூர் St. Mary's Higher Elementary பாடசாலையில் ஷை பாடசாலை மானேஜர் சங். J. S. அருள்ஸ்வாமி B.A., L.T. அவர்கள் தலைமைவகித்து தேசீயப் போர்முனையைப்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். வெற்றி பெறக்கூடிய விஷயத்தைப் பற்றியும், பொய் வதந்திகளை எதிர்க்கவேண்டியதைப்பற்றியும் வற்புறுத்தினர். அவ்வமயம் ஸ்ரீ கண்ணப்பர் (District Organiser) யுத்த சம்பந்தமான விஷயங்களைப்பற்றிப் பேசினர். பெருங்கூட்டம் பெரிதும் பயனடைந்தது.

G. V. Natarajan, Secretary.

வருடாந்திரக் கொண்டாட்டம்

18—8—'43-ல் ஸ்ரீரங்கம் ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் வருடாந்திரக் கூட்டம் திருச்சி ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) திரு. முருகேச முதலியார், B.A., L.T. அவர்களது தலைமையின்கீழ் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் திரு. கணேசமூர்த்தி (உபஜில்லா கல்வி அதிகாரி) அவர்களும், திரு. வீராஸாமி பத்தர் M.A., L.T. (உதவி ஜி. அதிகாரி) அவர்களும், திரு. லெக்ஷ்மண அய்யர் (Senior Dy. Inspr.) அவர்களும் ஏனையோரும் விஜயம் செய்திருந்தனர். தேனீர் விருந்துக்குப்பின், தலைவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. வருடாந்திர ரிப்போர்ட்டு வாசித்தவுடன், திரு. வீராஸாமி பத்தர் அவர்கள் "ஆரம்ப ஆசிரியரும் புதுக் கல்வித்திட்டமும்" என்ற விஷயத்தைப் பற்றி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். தலைவரது முடிவுரைக்குப்பின் இராஜ வாழ்த்தோடு ஷை கொண்டாட்டம் இனிது முடிவுற்றது.

S. Varadharajan, Secretary.

பெற்ருேர் சங்கங்கள்

9-8-43-ல் உடையார்பாளையம் தாலூகா அமிர்தராயன்கோட்டை லேபர் பாடசாலை பெற்ருேர் சங்கக்கூட்டம் டெப்யூடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ராமகிருஷ்ண செட்டியார், B.A., L.T. அவர்களது தலைமையின் கீழ்க் கூடியது.

சிறுவர் சிறுமிகளால், கடவுள் வணக்கம் கல்வியின் அவசியம் இவற்றைப்பற்றிய பாடல்கள் நடைபெற்றன. பெண்கல்வியைப் பற்றி ஆசிரியர் திரு. வில்லியம் துரைராஜ் அவர்கள் சொற்பொழி வாற்றினர்.

தலைவரவர்களது முடிவுரைக்குப் பிறகு வந்தனோபசாரம் கூறப் பட்டதுடன் கூட்டம் கலைந்தது.

T. Doraiswamy Pillai, Secretary.

29—7—'43-ல் முசிரி தாலுக்கா நெட்டவேலம்பட்டி லேபர் ஸ்கூல் பெற்ருேர் சங்கம், ஷை ரேஞ்சு இன்ஸ்பெக்டர் ஸ்ரீ M. D. கோதண்டராமன் B.A., L.T. அவர்களின் தலைமையின்கீழ் கூடிற்றது. தலைவர், 'கல்வியும் தந்தையும்' 'யுத்தமும் நமது கடமையும்' என்பதைப்பற்றி சொற்பொழிவாற்றினர். அவ்வூர், கணக்கப்பிள்ளை ஸ்ரீ முத்தய்யா அவர்கள், 'பெற்ருேரின் கடமை' என்பதை சுருங்கக் கூறி விளக்கினுர். இறுதியில், ஸ்கூலாசிரியர் M. சாமிதுரை, தாழ்த் தப்பட்டோரிடத்து சர்க்கார் காட்டும் சலுகைகளைப்பற்றி எடுத்துப் புகட்டினர். முடிவில், கனம் D. L. O. அவர்கள் இலவசமாக அளித்த வேஷ்டி, பாவாடைகளை ஏழை மக்களுக்குத் தலைவரால் வழங்கப் பட்டு, அன்னவருக்கு நன்றியறிதல் கூறி, ராஜ வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைவுற்றது.

M. Swami Dorai, Secretary.

29-7-43 மு. தா. பச்சைப்பெருமாள்பட்டி லேபர் ஸ்கூலில் ஷை ரேஞ்சு டிப்யூடி இன்ஸ்பெக்டர் M. D. கோதண்டராமன், B.A., L.T. அவர்கள் தலைமையில் கூடிற்று.

தலைவர், 'பெண்கல்வியின் அவசியம்' என்பதைப் பற்றியும் சண்டையில் இஷ்டமுடையவர் சேரலாம் என்றும் பேசினர்.

ஷை ஸ்கூலாசிரியர் P. முத்துவேல் என்பவர், பெற்ருேர்களுக்கு புத்திமதி என்ற தலைப்பைப் பேசி விளக்கினுர்.

ஆசிரியர் M. சாமிதுரை என்பவர், சேரிகளின் சுகாதாரம் என்பதைப்பற்றியும் பேசினுர்.

முடிவில் திருச்சி ஜில்லா லேபர் ஆபீசரவர்கள், ஏழைப் பிள்ளை களுக்கு இனுமாக அளித்த வேஷ்டி பாவாடை முதலியன, ஷை தலைவரால் வழங்கப்பட்டு அன்னவருக்கு நன்றியறிதல் கூறி ராஜ வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைவுற்றது.

P. Muthuvel, Secretary.

சங்கீதம்

"மகன் தந்தைக்குப் புகட்டிய புத்தி"

(B. Thomas Victor, Music Teacher, R. C. T. S., Trichy.)

29. மே. க. சங்கராபரணம், ஆதி-தாளம்

1. , தஸரி கா ;	மகரிஸரீ ;	, தஸரிகபமக	ரீஸநிஸா ;
. செல்வமுடை.	ஓர்மனிதன்	. சீருடனே ...	வாழ்ந்திருக்க
, ககம பாமத	பாமகரீ ;	, தஸரி கபமக	ரீஸநி ஸா ;
. பல்வகையில்.	தன்பணத்தை.	பத்திரமா..ய்	கார்த்துவந்தான்

(மற்ற அடிகளை இதேமாதிரி பாடவும்)

2. கற்றறியா மூடனவன்
கல் நெஞ்சுடை மடையனவன்
பெற்ற தந்தை வருந்திடவே
தொல்லை பல செய்து வந்தான்.

3. வஞ்சகமாய் வயோதிகர்க்கு
வடித்தகஞ்சி வார்த்து வந்தான்
சஞ்சலமாய் அவர் அதனை
சாப்பிடுமுன் அடித்துதைப்பான்.

4. செல்வன் மகன் அதை அறிந்து
மனமிரங்கி வருத்தமுற்று
கல்நெஞ்சராம் எனது தந்தை
கற்பிப்பே னொருபாட மென்றான்.

5. ஓடதனை ஓரிடத்தில்
மறைத்துவைத்து பத்திரமாய்
ஓடியேநான் மறைந்துகொண்டு
நடப்பதெல்லாம் அறிந்துகொள்வேன்.

தனவான்

6. சடிக்கிழவா ஓட்டை எடு
சீக்கிரமாய் தாமதமேன்
வடிகஞ்சி வார்க்கிறேண்டா
குடித்துவிட்டு விழுந்துகிட.

கிழவன்

7. என் ஓட்டைக் காணோமப்பா
எவரெடுத்தார் தெரியவில்லை
இன்று எனக் கொன்றுமில்லை
என்செய்வேன் ஜெகதீசா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 SEP 1943
MADRAS

சிறு பையன்

8. அப்பாநீர் அடிக்கவேண்டாம்
அன்புள்ள உம் தந்தையரை
இப்போ நான் மறைத்துவைத்த
ஓடுதனைக் காட்டுகிறேன்.

தனவான்

9. சிறுபயலே ஏனெடுத்தாய்
சீக்கிரமாய்க் கொடு அதனை
மறுபடியும் கிழவனுக்கு
பசியாரக் கஞ்சி வார்ப்பேன்.

சென்னை-600 008

சிறு பையன்

10. அப்பா நீர் கிழமான
பின்னுமக்கு கஞ்சிவூற்ற
இப்போநான் ஓடதனை
மறைத்துவைத்தேன் மன்னித்திடும்.

* * *

11. வெட்கத்தினால் தலைகவிழ்ந்தே
தந்தைமிக வாடிநின்றான்
மட்டியவன் மகனுரைத்த
மதியினைக்கேட் டறிவடைந்தான்.

189980

12. என்னநுமைப் பாலர்களே
கேளுமிதன் நீதிதனை
அன்புறுமுன் பெற்றோர்களை
இன்பமுடன் ஆதரிப்பீர்.

விகடம்

மாஜிஸ்ட்ரேட் :—அடேய்! நீ போன-மீ 30-ம் வ அந்தக் குளத்தில் களிமண் வெட்டினாயா?

குற்றவாளி :—வெட்டப்போனேனேயொழிய வெட்டவில்லை எஜமான்.

மா. :—சரி, வெட்டப்போனதும், வெட்டினதும் ஒன்றுதான். பத்து ரூ. அபராதம் உனக்கு.

(அபராதம் செலுத்தாமல் போவதைப் பார்த்து) ஏன் செலுத்தாமல் போகிறாய்?

கு. :—செலுத்துவதும், செலுத்தலாம் என்று இருப்பதும் ஒன்றுதான் என்று நினைத்துவிட்டேனுங்க. (Muthappan.)

பழைய மாணவர்காள்!

ஞாபகமிருக்கட்டும்!

1. ஒரு வெள்ளிப்பதக்கம். கல்விப் பொருட் காட்சியில் சித்திரத்தில் முதன்மையாகத் தேர்ந்தவருக்கு. சமர்ப்பிக்கும் கடைசி தேதி, 13-10-1943.

2. ஒரு வெள்ளிப்பதக்கம். கல்விப் பொருட் காட்சியில் சிறந்த தமிழ் போதனு உபகரணங்கள் தயாரித்தவருக்கு. சமர்ப்பிக்கும் கடைசி தேதி, 13-10-1943.

3. ஒரு வெள்ளிப்பதக்கம். இம்மாதம் 30-ம் தேதிக்குள், எழுக்குக் குறையாமல் அதிகமான "பூங்கொத்து" சந்தாதார்களைச் சேர்த்துக் கொடுப்பவருக்கு. சமர்ப்பிக்கும் கடைசி தேதி, 30-9-1943.

4. ஒரு வெள்ளிப்பதக்கம். 1942, 1943-ல் பயின்ற மாணவர்களுள் சிறந்த "சிறு கதை" எழுதுபவருக்கு. சமர்ப்பிக்கும் கடைசி தேதி, 1-10-1943.

தலைமையாசிரியர்,
R. C. செக்கண்டரி போதனுமுறை பாடசாலை,
திருச்சினுப்பள்ளி.

Reg. No. M. 1534.

OUR EMPLOYMENT BUREAU

WANTED immediately Two Secondary Grade Trained Teachers and one Tamil Pandit.

Apply to :

The Very Rev. Father S. ARPUTHASAMI,
Manager, & Correspondent,
R. C. Higher Elementary School,
Purathakudy,
Irungalur P. O., TRICHY Dt.

WANTED A Secondary Grade Trained Teacher for Holy Redeemer's Higher Elementary School. For particulars

Apply to. **THE MANAGER,**
Holy Redeemer's Church, TRICHINOPOLY.

WANTED A Secondary Grade Trained Teacher or Higher Grade Trained Teacher for the R. C. Elementary School, Erode.

Apply to :

THE MANAGER,
R. C. School, ERODE.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.